2017

2017 501673

No. of Printed Pages : **4**

**6906**

Register Number

இரண்டாம் ஆண்டு

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : பகுதி **ஆ** மற்றும் **இ** -க்கு ஒரு வரிக்கு **5** சொற்களுக்குக் குறையாமலும் பக்கத்திற்கு **20** வரிகளுக்கு மிகாமலும் விடையளிக்கவும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. டிஸ்கிராஃபியா (Dysgraphia) என்றால் என்ன ?

2. தேர்வின் வகைகள் யாவை ?

3. அறிவுசார்ந்த வகைக் கற்றலின் (Cognitive Domain) நோக்கங்கள் நான்கினைக் கூறுக.

4. வகுப்புகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் போது வழங்கப்படக் கூடிய செயல்பாடுகள் யாவை ?

5. நெகிழ்வுத் தன்மை கொண்ட வகுப்பறை எவ்வாறு இருக்க வேண்டும் ?

[ Turn over

6. ஒளிபுகும் தாள்கள் தயாரிக்கப்படும் முறைகள் யாவை ?

7. கற்றல் இயலாமை என்றால் என்ன ?

8. வாசிக்கும் குறைபாடுடைய மாணவர்களின் பிரச்சனை தீர நீவீர் கூறும் வழிமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. குறையறிச் சோதனை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

10. பண்பு சார்ந்த மதிப்பீட்டின் மூன்று நிலைகள் யாவை ?

11. பயிற்சி ஆசிரியர்களுக்கான விழுமத்தின் முக்கியத்துவம் ஏதேனும் நான்கினைக் கூறுக.

12. பல் வகுப்புப் பயிற்றலில் ஆசிரியர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏதேனும் நான்கினைக் கூறுக.

13. ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைக்கான உடன்படிக்கை பிரிவு - 30 (பி) மற்றும் பிரிவு - (31) உணர்த்துவது யாது ?

14. மென்பொருள் நுட்பவியல் என்றால் என்ன ?

15. உன் வகுப்பறையில் பல்வகை ஊடகப் பயன்பாட்டிற்கு ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டு தருக.

## பகுதி - ஆ

II. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவை ?

17. செவித்திறன் குறைபாடு ஏற்படக் காரணங்கள் யாவை ? அக்குறைபாடுடைய குழந்தைகளுக்கு உதவும் துணைக் கருவிகள் ஏதேனும் நான்கினைக் கூறுக.

18. பல்விடை தேர்தல் வினா (Multiple Choice Question) என்றால் என்ன ? அவ்வினாவினை எவ்வாறு தயாரிப்பாய் என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.

19. மதிப்பீட்டின் வகைகள் யாவை ? விளக்குக.

20. உடன்பாட்டு மனப்பான்மை என்றால் என்ன ? உன் மாணவர்களிடம் உடன்பாட்டு மனப்பான்மையை எவ்வாறு வளர்ப்பாய் ?

21. பள்ளிகளில் விழுமக்கல்வி அளிப்பதன் பொதுநோக்கங்கள் யாவை ?

22. பல்வகுப்புப் பயிற்றலில் குழுத்தலைவரின் பணிகள் யாவை ?

23. பல்வகுப்பு கற்பித்தலில், குழுக்கள் பிரித்தலின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை ?

24. 'குழந்தைகளின் அடிப்படை உரிமைக்ள் (Basic Rights)' விவரிக்கவும்.

25. ஒரு வகுப்பறையின் அமைப்பு சிறப்பானதாக அமைய நீவீர் கூறும் கருத்துக்களை எழுதுக.

26. வகுப்பறைப் பயன்பாட்டில் கருவிப்பெட்டி - விளக்குக.

27. தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் (Information and Communication Technology) வகுப்பறைக் கற்பித்தலில் எவ்வாறு பயன்படுகிறது?

## பகுதி - இ

**III.** கீழ்க்கண்ட **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x10=30**

28. (அ) தகவல் பரிமாற்ற தொழில்நுட்ப பயன்களை விளக்குக.

**அல்லது**

(ஆ) மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு ஆசிரியர் - மாணவர் உறவுமுறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை விளக்குக.

**29.** (அ) மனவெழுச்சி நுண்ணறிவின் வரையறை, இயல்புகள் மற்றும் உட்கூறுகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியரின் தொழில் திறமையை வளர்த்துக் கொள்ள உதவும் பல்வேறு பணிநிலைப் பரிமாணங்கள் யாவை ?

**30.** (அ) தொடர்ச்சியான முழுமையான அகமதிப்பீட்டு முறையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பார்வை திறன் குறைபாடுள்ள குழந்தைகள் வகுப்பறையில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை விளக்குக.

-o0o-